www.freetnbooks.com

V12T

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2025

-----

வகுப்பு 12

கால அளவு: 3.00 மணிநேரம் | பொதுத்தமிழ் | மதிப்பெண்கள்: 90

பகுதி - I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 14×1=14

1) 'செம்பரிதி ...' எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு

அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ இ) சர்ப்பயாகம் ஈ) சூரியநிழல்

2) பொருத்துக

அ) ஆமந்திரிகை - 1) முத்து

ஆ) நித்திலம் - 2) மூங்கில்

இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம்

ஈ) கழை - 4) எடை அளவு

அ) 2 1 3 4 ஆ) 3 4 2 1 இ) 3 1 4 2 ஈ) 1 3 4 2

3) 'வாளால் அறுத்துச் சுடினும்' - இவ்வடியின் மூலம் குலசேகராழ்வார் வெளிப்படுத்துவது

அ) போர் ஆ) மருத்துவம் இ) விளையாட்டு ஈ) வேளாண்மை

4) ஒட்டுப் போடாத ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றேதான் .......... - இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

5) 'தந்தனன் தாதை தன்னைத் **தடக்கையான்**
எடுத்துச் சார்வான்' - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) உரிச்சொல் தொடர் ஆ) வினைத்தொகை

இ) உம்மைத் தொகை ஈ) இடைச்சொல் தொடர்

6) வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - எதற்கு?

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி

இ) தினைத் துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

7) பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்க.

அ) கர்ணன் தோற்றான் போ

ஆ) வயதில் சிறியவர், ஆனாலும் தலைவர்!

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு

ஈ) இந்தா போறான் தருமன்

8) சென்னை வெறும் நகரம் மட்டுமன்று, அது நம்பிக்கை மையம் - காரணம்

அ) நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

9) 'பில்கிரிம்ஸ் புராகிரஸ்' என்னும் ஆங்கில நூலின் தழுவல் நூல் எது?

அ) தேம்பாவணி ஆ) இயேசு காவியம்

இ) இரட்சணிய யாத்திரகம் ஈ) இரட்சணிய மனோகரம்

10) நடுங்கும் படியான துன்பம் இல்லாதவர்

அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்

ஆ) மனத்திட்பம் உடையவர்

இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்

ஈ) சூதாடும் இடத்தில் காலம் கழிப்பவர்

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

11) 'ஒவ்வொரும் நாளும் சூரியன் புதிது' என்று குறிப்பிடுபவர்
அ) பெரிபெலஸ் ஆ) ஹிராக்ளிடஸ் இ) இறையன்பு ஈ) ஸ்ட்ரேபோ

12) பிழையான தொடரைக் கண்டறிக்
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
ஆ) மலைமீது ஏறிக்கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின

13) 'சேரநாட்டு மருமக்கள் தாயமுறை' பற்றிக் கூறும் நூல்
அ) பதிற்றுப்பத்து ஆ) புறநானூறு இ) நற்றிணை ஈ) கலித்தொகை

14) 'கைப்பிடியளவு கடல்' என்ற கவிதை நூலின் ஆசிரியர்
அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) அய்ப்ப மாதவன்
இ) சிவராமலிங்கம் ஈ) ஜலாலுதீன் ரூமி

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** **3×2=6**

15) 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

16) செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?

17) இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

18) காற்றின் தீராத பக்கங்களில் எதனை, எது எழுதிச் சென்றது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** **2×2=4**

19) இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை - குறிப்பு வரைக

20) புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக

21) பின்னணி இசை படத்தின் காட்சி அமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக

## பகுதி - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி** **7×2=14**

22) எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக**
அ) வியந்து ஆ) பகைத்த

24) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக**
அ) புதுப்பெயல் ஆ) உள்ளொன்று

25) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக**
விலை, விளை, விழை

26) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக**
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம்,
உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு
அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை
கற்று கொடுக்கும்

27) **தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக**
பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்


Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



28) **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக**

மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

29) **பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க**

திண்மை - திண்மை

30) **மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக**

அகலக்கால்

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக** **2×4=8**

31) மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக

32) வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

33) குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக

34) பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையை திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக** **2×4=8**

35) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

36) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக

37) சென்னை அறிவின் நகரம் என்பதைச் சான்றுகளுடன் விளக்குக

38) தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக** **3×4=12**

39) **இலக்கிய நயம் பாராட்டுக**

**மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக**

*பிறப்பினால் எவர்க்கும் - உலகில்*
*பெருமை வாராதப்பா!*
*சிறப்பு வேண்டுமெனில் - நல்ல*
*செய்கை வேண்டுமப்பா!*
*நன்மை செய்பவரே - உலகம்*
*நாடும் மேற்குலத்தார்!*
*தின்மை செய்பவரே - அண்டித்*
*தீண்ட ஒண்ணாதார்!*

- கவிமணி தேசிக விநாயகம்

40) அ) ஏகதேச உருவக அணியை விளக்குக

**(அலல்து)**

ஆ) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



41) பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்து எழுதுக

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

(அல்லது)

ஆனைக்கும் அடிசறுக்கும்

42) மாற்றுச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பம் வரைக.

43) தமிழாக்கம் தருக

1) Learning is a treasure that will follow its owner everywhere
2) A new language is a new life
3) Knowledge of language is the doorway to wisdom
4) If you want people to understand you, speak their language.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. **3×6=18**

44) அ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக

(அல்லது)

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக

45) அ) மயிலை சீனி வேங்கடசாமி ஓர் 'ஆராய்ச்சிப்பேரறிஞர்' என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுக

(அல்லது)

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக

46) அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'சூரியனைப் பிரசவிக்கும் பாறை' என்னும் சிறுகதை உணர்த்தும் கருத்துக்களைச் சுவை குன்றாமல் சுருக்கி வரைக.

## பகுதி - V

47) அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக **4+2=6**

அ) 'பாதகர் குழுமிச் சொற்ற' எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரகப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'சினம்' என முடியும் குறள்

- - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner